1972 டிசம்பர் 15]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்பு என்னிடமில்லை. தனிக் கேள்வி கேட்டால், அதுபற்றிய விவரங்களை அறியலாம்.

S.S.L.C. Examination

* 117 *Q.*—THIRU K. ARIVAZHAGAN (on behalf of PULAVAR O. ARIVUDAI NAMBI) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :—

(*a*) the number of High Schools (district-wise) from which not even a single student passed in the S.S.L.C. Examination held during 1971 ; and

(*b*) the steps taken or proposed to be taken to improve the standard of those High Schools ?

பள்ளி இறுதித் தேர்வு.

திரு. க. அறிவழகன் : (புலவர் ஒ. அறிவுடைநம்பி சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) 1971-ஆம் ஆண்டு பள்ளி இறுதித் தேர்வில் ஒரு மாணவர் கூட வெற்றி பெறாத உயர்நிலைப் பள்ளிகள் மாவட்டவாரியாக எத்தனை உள்ளன ?

(இ) அவ்வாறு உள்ள பள்ளிகளின் தரத்தை உயர்த்த அரசு (1) எடுக்க இருக்கும் (2) எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தென்னாற்காடு மாவட்டத்தில் கீழக்கால்பண்டி, தாகம்தீர்த்தான்புரம் என்னும் ஊர்களிலுள்ள இரு அரசு உயர்நிலைப் பள்ளிகளில், 1971-ம் ஆண்டு நடைபெற்ற பள்ளியிறுதித் தேர்வு எழுதிய முறையே, நான்கு, பன்னிரண்டு மாணவர்களில் ஒருவர் கூடத் தேறவில்லை.

(இ) பள்ளி மாணவர்களுக்கு, விசேஷ வகுப்புகளும் பயிற்சிகளும் அளிக்கப்பட வேண்டுமென்றும், மாணவர்களின் திறனை அதிகரிக்கும் வகையில் வீட்டுப் பாடங்கள், வகுப்புகள் நடத்தப்பட வேண்டும் என்றும், ஆசிரியர்களின் கற்பிக்கும் முறைகள் கண்காணிக்கப்பட வேண்டும் என்றும், அவரவர் வீடுகளில் பாடங்களை படிக்க வசதியில்லையெனில், பள்ளிகளிலேயே படித்துச் செல்ல வகை செய்யப்பட வேண்டும் என்றும், பள்ளிக் கல்வி இயக்குநர், தென்னாற்காடு மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி அவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, ஒரு பள்ளியில் 4 மாணவர்களும், இன்னொரு பள்ளியில் 12 மாணவர்களும்தான் பரீட்சைக்குப் போயிருக்கிறார்கள். அவர்களைத் தனியாகக் கவனித்து,

தேர்ச்சியடைய வைப்பது மிகவும் எளிதாக இருக்க வேண்டும். எனவே, அந்த ஆசிரியர்கள் ஆண்டு முழுவதும் இருந்தார்களா? அல்லது ஆசிரியர்கள் இல்லாத குறையா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஆசிரியர் இல்லை என்ற குறை இருந்ததாகத் தெரியவில்லை. ஒரு பள்ளியில் 4 பேரும், ஒரு பள்ளியில் 12 பேரும் தேர்வு பெறாமல் இருக்கிறார்கள். ஆகவே அதற்குப் பிறகுதான் இப்படிப்பட்ட அறிவுரைகளெல்லாம் தரப்பட்டு, விசேஷ கவனம் செலுத்தப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவர் அவர்களே, இப்படித் தகுதிக்கான தேர்வு விகிதாச்சாரம் தராத ஆசிரியர்களுக்கு அடுத்த ஆண்டு கொடுக்கக்கூடிய ஊதிய உயர்வு போன்றவைகளைக் கேள்விக் குறியாக ஆக்குவதற்கு அரசுக்கு நோக்கம் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இது குறிப்பிட்ட ஆசிரியரின்கீழ் அவ்வளவு மாணவர்களும் படிப்பதாக இருந்தால், நாம் கணக்கிட முடியும். பல்வேறு சூழ்நிலைகளின் காரணமாக அமைகின்றது. அதுமட்டுமல்ல, பல ஆசிரியர்கள் பள்ளி இறுதி வகுப்புக்குப் பொறுப்பு ஏற்கிறார்கள். அது மட்டுமல்லாமல், அவர்கள் பொறுப்பு ஏற்றாலும் கூட, அதற்குப் பிறகு வேறு வசதிகள் இல்லை, வேறு பல நிலைமைகள் இல்லை என்ற பல்வேறு காரணங்களைச் சொல்லக்கூடும். ஆனால் அப்படிப்பட்ட இடர்பாடுகளைக் களைவதற்கான முயற்சிகளைக் கல்வித் துறையைச் சேர்ந்தவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவர் அவர்களே, அந்த இரண்டு பள்ளிகளிலும் பள்ளி இறுதி வகுப்பில் இருந்த மொத்த மாணவர்களுடைய சங்கியை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஒரு பள்ளியில் நான்கே நான்கு மாணவர்கள் பள்ளியிறுதி வகுப்பில் பரிட்சை எழுதியவர்கள்; மற்றொரு பள்ளியில் 12 பேர்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவர் அவர்களே, பல ஆசிரியர்கள் பயிற்றுவிக்கிறார்கள் என்பதிலே கருத்து வேற்றுமையில்லை. நான் எல்லா ஆசிரியர்களையும் நினைத்துச் சொல்லவில்லை. தலைமை ஆசிரியர்தான் அனைத்துக்கும் பொறுப்புடையவர். அவரைக் குறைந்த பட்சம் விளக்கமாவது கேட்கக்கூடிய மரபு உருவாக்கப்பட்டால்தான் பயிற்சி முறை தேர்வு பெறும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பொதுவாக 50 சதவிகிதத்திற்கு மேலே மாணவர்கள் தோல்விக்கு உரியவர்களானால், அந்தப் பள்ளியிலே எல்லாம் விளக்கங்களைக் கேட்க வேண்டு

மென்று நான் கூறியிருக்கிறேன். ஏனென்றால் 50 சதவீதத்திற்கு மேலே மேலும், மேலும் ஊக்கம் அளிக்கின்ற வகையில் நூற்றுக்கு நூறு மாணவர்கள் பள்ளிகளிலே வெற்றி பெறுகின்ற வகையில் ஊக்கம் தந்து, அதற்கு மாணவர்களைப் பயிற்றுவிக்கக் காரணமாக இருக்கிற ஆசிரியர்களையெல்லாம் பாராட்ட வேண்டுமென்ற கருத்துக்கூட வழங்கப்பட்டிருக்கிறது. அப்படி சில பல இடங்களில் பாராட்டுக்கள் வழங்கி வருகிறார்கள். பொதுவாக நகராட்சி மன்றப் பள்ளிக்கூடங்களில் அதிகத் தரமில்லை என்றாலும் கூட அண்மையில் நான் கும்பகோணம் சென்றிருந்தபோது, கும்பகோணம் நகராட்சி மன்ற உயர்நிலைப்பள்ளி ஒன்றில் சென்ற மூன்று ஆண்டுக் காலமாக 100-க்கு 100 மாணவர்கள் வெற்றி பெற்று வருகிறார்கள் என்று தெரிந்தது. மிகச் சாதாரணமாக, பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் மட்டுமே படிக்கக் கூடிய, நகரத்திற்கு வெளிப்புறத்தில் இருக்கக்கூடிய பள்ளியில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அங்கே பயிற்றுவிக்கின்ற ஆசிரியர்கள் அத்தனை பேருக்கும் பரிசுகள் வழங்கி அந்த நகராட்சி மன்றமே பாராட்டியிருக்கிறது. ஆகவே அதிகமாக எண்களை ஏற்படுத்தித் தருகிறவர்களுக்கு பாராட்டுதல் வழங்குகிற அத்தகைய முறை பல இடங்களில் கையாளப்பட்டு வருகிறது.

திரு எஸ். ஜெயராம ரெட்டியார்: தலைவர் அவர்களே, தனிப்பட்ட முறையில் தலைமையாசிரியர்கள் பொறுப்பு ஏற்காமல் எல்லா ஆசிரியர்களுக்கும் சேர்த்து கூட்டாக ஏதாவது ஒரு கண்டனம் தெரிவிக்கின்ற முறையில் வகை செய்தாலொழிய, இந்தக் குறை தீராது. அப்படி ஏதாவது வகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்போது அப்படிப்பட்ட முறை எதுமில்லை. அப்படி ஏதாவது முறை வகுக்கப்பட்டு அதை நடைமுறைப்படுத்த இயலுமென்று அரசு அறியுமேயானால், அது பற்றி அரசு ஆலோசனை செய்யும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சதர்: இந்தப் பள்ளிக்கூடத்திலே 12 மாணவர்களும், 4 மாணவர்களும் நூற்றுக்கு நூறு தவறிய மாணவர்கள். அந்தப் பள்ளிக்கூடத்திலே இருப்பதற்குக் காரணம் ஆசிரியர்களா அல்லது மாணவர்கள் தரக்குறைவா என்பதைக் கண்டு பிடித்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்றுஅறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: எந்த பள்ளிக்கூடத்திலே.

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன்: இப்போது நடவடிக்கை எடுக்க முடியவில்லை. ஊரின் பெயர் 'கீழ்க்கால் பூண்டி, தாகம் தீர்த்தான்புரம் என்றுதான் இருக்கிறது. இங்கு கல்வித்தாகம் தான் தீர்க்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் அங்கு 4 மாணவர்கள் மட்டுமே, 12 மாணவர்கள் மட்டுமே வரக்கூடிய நிலையை இந்த உயர்நிலைப்பள்ளி பெற்றிருந்த காரணத்தால், இந்த சமுதாயத்தினுடைய சூழ்நிலை அந்த அளவுக்கு அமைந்திருக்கிறது என்று தான் நாம் கொள்ள வேண்டுமேயொழிய வேறில்லை.

இதே ஆசிரியர்களை வேறு ஒரு உயர்நிலைப்பள்ளியிலே கொண்டுபோய் அமர்த்தி வைப்போமானால், அந்தப் பள்ளியினுடைய எண்ணிக்கை ஓரளவுக்கு நாம் எல்லாம் பாராட்டத்தக்க அளவுக்குக்கூட அமையக் கூடும்.

அதை ஆராய்ந்து அவர்களுக்குத் தகுந்த அறிவுரைகளை வழங்க வேண்டுமென்று மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரி அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவரவர்களே, இந்த மேற்கூறப் பட்ட இரு பள்ளிகளிலும் பள்ளி இறுதி வகுப்பிற்கு முதன்முதலாக 1971-லே தான் மாணவர்கள் அனுப்பப்பட்டார்களா, அதற்கு முன்னாலே அனுப்பப்பட்டார்களா? அந்த நான்கு மாணவர்களும், 12 மாணவர்களும் பள்ளி இறுதி வகுப்பிற்கு வந்த முதல் வருடம், ஒரு வேளை தகுதி பெறாத நிலையிலேயே இறுதி வகுப்பிற்கு அனுப்பப்பட்டார்களா, 10-வது வகுப்பிலே இருக்கவேண்டியவர்களை அனுப்பி வைத்தார்களா என்பதைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது பற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. ஏனென்றால் 1971-வது ஆண்டு நடைபெற்ற இறுதித் தேர்விலேதான் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது பற்றிய விவரம் இல்லை. ஆனால் குறைவாகத்தான் இருக்கக்கூடும். சாதாரண மாக தமிழக மாநிலம் முழுவதும் கணக்கு எடுத்துப்பார்த்தால், 60 மாணவர்களுக்குக் குறைவாகவே இருக்கத்தக்க அளவுக்கு 60, 65 உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. வேறு பள்ளிகளில் சேர்க்கவோ முடியாது. பரவலாக இருக்கிறது. பள்ளி இறுதி வகுப்பில் 4 மாணவர்கள், 12 மாணவர்கள் தான் இருக்கிறார்கள். ஆகவே 10வது, 9வது வகுப்பில் உள்ள மாணவர்கள் எண்ணிக்கை இதை விடக் குறை வாகத்தான் இருக்கக்கூடும்.

திரு கே. ராஜாராம் : தலைவரவர்களே, இந்த இரண்டு உயர்நிலைப் பள்ளிகளும் அரசுப் பள்ளிகள் என்று நினைக்கிறேன். தனியார் பள்ளி கள் அல்ல. ஆகவே அரசுப்பள்ளிகளில் நூற்றுக்கு நூறு மாணவர்கள் பள்ளி இறுதி வகுப்பில் தேர்வு பெறாமல் இருப்பதற்கு, இந்த நிலைமை ஏற்பட்டிருப்பதற்கு, அந்தப் பள்ளியின் ஹெட்மாஸ்டர்கள் அல்லது தலைமை ஆசிரியர்கள் பேரில் நடவடிக்கை எடுப்பதில் என்ன அரசுக்குக் கஷ்டம்.? இந்த மாதிரி 2 பாடசாலைகளிலாவது நடவடிக்கை எடுத்தால், மற்ற பள்ளிகளிலே உள்ள ஆசிரியர்கள் நல்ல முறையில் மாணவர்கள் தேர்ச்சி பெறுமளவுக்குப் பாடத்தைக் கற்றுக் கொடுப்பார்கள் அல்லவா? ஏன் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தயக்கம் காட்டுகிறது என்று கேட் கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் முதலில் சொன்னபடி, இந்த அறிவுரைகள் எல்லாம் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன என்று எனக்குச் செய்தி தரப்பட்டிருக்கிறது.

1972 டிசம்பர் 15]

அதற்குக் காரணம் என்ன என்பதைக் கண்டுபிடித்து, அதன் பிறகு அந்தக் காரணத்திற்கு உரியவர்கள் மீது வேண்டுமாஞல் தக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம். இதற்குக் காரணம் தலைமை ஆசிரியரா, அல்லது அங்கு இருக்கிற மாணவர்களுடைய சூழ்நிலைகளா என்பதைக் கண்டறிய வேண்டும். அதைத் தனியாகத்தான் அறிய வேண்டும்.

THIRU S. NARAYANASWAMY : Will the Hon. Minister kindly make particular enquiries to see if the teachers concerned were kept engaged in some other work, like Family Planning propaganda or the sale of lottery tickets, not connected with work of the schools in question?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது உயர்நிலைப் பள்ளி என்பதைப் பொறுத்தது. உயர்நிலைப்பள்ளி, பள்ளி இறுதி வகுப்பு என்ற காரணத்தால் உயர்நிலைப்பள்ளிகளிலே பணி புரிகின்ற ஆசிரியர்கள் யாரும் இப்படிப்பட்ட பணிகளிலே ஈடுபடுத்தப் படுவதில்லை. பொதுவாக துவக்கப்பள்ளி ஆசிரியர்கள்தான் ஆங்காங்குள்ள ஊராட்சி ஒன்றியங்களிலோ அதிகாரிகளோ அல்லது மற்றவர்களோ அதைச் செய்கிருர்கள். அந்தக் குறிப்பிட்ட குறைபாடு இந்த ஆண்டு இல்லாத அளவு செய்வதற்கான முறைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது.

MR. CHAIRMAN : Most probably the teachers alone have more children.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, இந்த இரண்டு பள்ளிகளிலும் சென்ற ஆண்டும் இந்த ஆண்டும் "ஜீரோ" ரிஸல்ட் வந்தது. இதற்கு முந்திய ஆண்டும் அதுமாதிரியே "ஜீரோ" ரிஸல்டா? என்ன பர்சென்டேஜ் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது பற்றிய விவரக்குறிப்பு என்னிடம் தற்போதில்லை.

தவத் திரு. குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் விடையில் சூழ்நிலையும் காரணம் என்று குறிப்பிட்டார்கள். பெரும்பாலும் நாற்றங்காலிலிருந்து கழனிக்கு நாற்றை மாற்றுவது போல இடம் மாற்றிப் பயிற்றுவித்தால், அந்தச் சூழ்நிலை வளர்ச்சி பெற முடியும். அதற்குத் தகுந்த கல்வி வாய்ப்பினை மாணவர்களுக்கு அதிகமாக அளிக்க அரசினிடம் ஏதாவது செயற்குறிப்பு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தச் சூழ்நிலை என்று கூறுவதற்குக் காரணமே பள்ளிக்கு அவர்களைக் கொண்டு போய்ச் சேர்ப்பதே கடினமாக இருக்கிறது. அவர்களுக்கு படிப்பிலே கவனம் செலுத்த முடிவதில்லை. அவர்கள் வீட்டு வேலைகள், கழனி வேலைகள், வயல் வேலைகள் அத்தனையும் பார்த்துவிட்டு படிப்பிலே ஈடுபட

முடிவதில்லை. பெற்றோர்களின் கட்டாயத்திலேதான் படிக்கிறார்கள். பள்ளிக்கு வருகின்றனர். சில பல இடங்களில் இந்த நிலைமை இருக்கிறது. இதையொட்டிக்கூட இது இருக்கக்கூடும். ஆனாலும், முழுவதும் ஆராய்ந்தால், அதுபற்றிய நிலைமைகள் நமக்குத் தெரியவரும்.

*118 வினு—

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : புலவர் அறிவுடைநம்பி இடத்திலே இல்லை.

Central Valuation System

* 118. *Q.*—THIRU K. ARIVAZHAGAN (on behalf of PULAVAR O.ARIVUDAI NAMBI) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether there is any proposal with the Government to adopt the Central Valuation System in the S.S.L.C. Examination held in October and

(*b*) if so, when it will come into force ?

மையத் திருத்து முறை.

திரு. க. அறிவழகன் : (புலவர் ஓ. அறிவுடைநம்பி சார்பில்) : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) பள்ளி இறுதி அக்டோபர் தேர்வில் மையத் திருத்து முறையை அனுசரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா ?

(இ) ஆமெனில், அது எப்போது அமுலுக்கு வரும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, இந்த "சென்ட்ரல் வேல்யுவேஷன் சிஸ்டம்" என்பதை அரசு நல்ல ஒரு அமைப்பாக ஏற்றுக் கொண்டுள்ளதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நாம் எதிர்பார்க்கும் குறைகள் எல்லாம் அதில் நீக்கப்பட்டுள்ளனவா ? வெகு சீக்கிரமாக, அவசர அவசரமாக இந்த விடைத்தாள்களுக்கெல்லாம் மார்க் போடப்படுகிறதாலே, அதைச் சரியானபடி சோதித்துப் பார்த்து மார்க் போடுவதற்கு போதிய அவகாசமில்லை என்ற புகார், மார்ச் பரிட்சை சம்பந்தமாக, அரசுக்கு வந்திருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.